# கைக்காசிற்காக வேலை செய்கின்றீர்களா? வேலையில் அதற்கான உரிமை உங்களுக்கு உண்டு

நேரடிப்பணமாக சம்பளத்தினை(கைக்காசாக) வழங்குவது சட்டரீதியானதாகும். பலவகைப்பட்ட தொழில்புரிபவர்களும் தங்களுக்குரிய வேதனத்தினை நேரடிப்பணமாகப்(கைக்காசாக) பெற்றுக் கொள்ளலாம் - கட்டட நிர்மாணம், சுத்திகரித்தல், நாளாந்த கூலி அடிப்படை, தற்காலிக ஏஜென்சிகள் அல்லது சேவைத்துறை மற்றும் பல துறைகளில் வேலைசெய்பவர்களிற்கும் இது பொருந்தும்.

சமூகக் காப்புறுதி எண்(SIN), வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் அல்லது குடிவரவு அந்தஸ்து இல்லாத நிலைமையில் கைக்காசு அடிப்படையில் வேலை செய்தால் கூட அடிப்படை தொழில்சட்டத்தின் கீழ் உங்களுக்கு உரிமைகள் உண்டு.

ஒருவேளை, வேலைத்தளத்தில் உங்களது உரிமைகள் மீறப்படுமாக இருப்பினும், அதற்கு உங்களை தயார்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். உங்களது வேலை, சம்பளம் மற்றும் முதலாளி தொடர்பான விரிவான தகவல்களை குறித்து வைத்துக் கொள்ளல் அவசியம். உங்களது வேலைத்தள உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள, உங்களுக்குச் சேரவேண்டிய தொகையினை பெற்றுக் கொள்ள அல்லது அது தொடர்பாக ஓர் முறைப்பாடொன்றை செய்வதற்கு அந்தத் தகவல்கள் உதவி செய்யும்.

## உங்களைப் பாதுகாத்துக் கொள்ள!

- வேலை செய்த மணித்தியாலங்கள், திகதிகள், வேலை செய்த இடம் மற்றும் ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டிருப்பின் அது தொடர்பான தகவல்களைத் தனிப்பட்ட முறையில் குறித்து வைத்துக் கொள்ளல் வேண்டும். இத்தகவல்களை வீட்டில் அல்லது உங்களது செல்லிடத் தொலைபேசியில் வைத்திருக்கவும்.
- உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகையினைக் குறித்து வைத்துக் கொள்ளவும். மின்னஞ்சல் பரிவர்த்தனை, சம்பளநாள் கடன் அல்லது காசு நிலைய ரசீதுகள் அல்லது உங்களது முதலாளியினால் செலுத்தப்பட்ட தொகையினை நிரூபிக்கக் கூடிய வேறு ஏதாவது ஆவணங்கள் யாவற்றினதும் பிரதிகளை பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும். முடியுமானால், பெற்றுக் கொள்ளப்பட்ட சகல காசையும் வங்கிக் கணக்கொன்றில் வைப்பிட்டால், வங்கி அறிக்கையினை ஆதாரமாகப் பாவிக்கலாம்.
- உங்களது முதலாளி மற்றும் கம்பனி தொடர்பாக உங்களால் பெறக்கூடியதான தகவல்கள்: பெயர், பதவி, வேலை மற்றும் வீட்டு விலாசம், தொலைபேசி இலக்கங்கள், வாகன இலக்கத்தகட்டின் இலக்கம் போன்றவற்றை எழுதி வைத்துக் கொள்ளல் வேண்டும்.
- முதலாளியுடனான தொடர்பாடல்களை பேணி வைத்துக் கொள்ளல்: குறுந்தகவல்கள், மின்னஞ்சல்கள், தொலைபேசி மற்றும் கடிதப்பரிமாற்றங்களின் ஆதாரங்கள் போன்றன.
- நீங்கள் கைக்காசுக்கு வேலை செய்பவராக இருப்பினும், தொழில்காப்புறுதிக்கும்(EI) நீங்கள் தகுதி பெறகூடும். வேலை செய்யப்பட்ட மணித்தியாலங்கள் மற்றும் செலுத்தப்பட்ட சம்பளம் போன்ற தகவல்களை பேணி வைத்துக் கொள்வது மிக அவசியம். நீங்கள் வேலையினை நிறுத்தியவுடன் தொழில்காப்புறுதிக்கு விண்ணப்பிக்கவும்.
- உங்களது முதலாளி உங்களது விலாசத்தினை அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையான விலாசத்தினை கொடுப்பதில் உங்களுக்குத் தயக்கம் இருக்குமாயின் வேறொரு விலாசத்தினை நீங்கள் கொடுக்கலாம். உங்களது கடிதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விலாசமொன்றினை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- உங்களது குடியுரிமை அந்தஸ்து தொடர்பான தகவல்களை உங்களுக்கு நம்பிக்கையானவர்களுடன் மாத்திரம் பகிர்ந்து கொள்ளவும்.
- உங்களது உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன என நீங்கள் நினைப்பீர்களாயின் உடனடியாக தொழிலாளர்கள் நடவடிக்கை நிலையத்தினை தொடர்பு கொள்ளவும். அனைத்துத் அழைப்புகளும் இரகசியம் பேணப்படுவதுடன் எமது சேவைகள் இலவசமானதும் ஆகும்.

## ஊதியத்தினைப் பெறல்

நேரடிப்பணமாக(கைக்காசாக) சம்பளத்தினை வழங்குவது சட்டபூர்வமானதாகும். ஆனால் உங்களுக்கு ஆகக்குறைந்தது அடிப்படைச்சம்பளமாவது வழங்கப்படல் வேண்டும். உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும் ஒவ்வொரு முறையும் தொழில்தருநரினால் உங்களுக்கு சம்பள சிட்டை (Payslip) வழங்கப்படுதல் வேண்டும். உங்களால் வேலை செய்யப்பட்ட மணித்தியாலங்கள், மணித்தியால ஊதிய விகிதம், மேலதிக நேரப்படி, பொதுவிடுமுறைக்குரிய கொடுப்பனவு, விடுப்பு பற்றிய தகவல்களும் மற்றும் வரி, தொழில்காப்புறுதி (EI),

Workers' Action Centre
416-531-0778
இலவச கட்டண தொலைபேசி: 1-855-531-0778
www.workersactioncentre.org

# கைக்காசிற்காக வேலை செய்கின்றீர்களா? வேலையில் அதற்கான உரிமை உங்களுக்கு உண்டு

கனடா பென்சன் திட்டம் (CPP) தொடர்பாகக் கழிக்கப்பட்ட தொகைகளையும் அதில் குறிப்பிட வேண்டும்.

உங்களுக்குரிய வேதனத்தினை நேரடிக்காசாக வழங்கும் முதலாளி அதற்குரிய சம்பளசிட்டையினை வழங்க விரும்புவதில்லை. ஏனெனில் தொழில்தருநர் பங்களிப்பான தொழில்காப்புறுதி அல்லது வரியினை செலுத்துவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்காகும். நீங்கள் சமபள சிட்டையினைப் பெறாவிட்டாலும் கூட, உங்களுக்கு உரிமைகள் இருக்கின்றன. வேலை செய்த மணித்தியாலங்கள் மற்றும் செலுத்தப்பட்ட தொகை தொடர்பில் தனிப்பட்ட ஆவணங்களை பேணல் அவசியம்.

## குடியுரிமை அந்தஸ்து இல்லையா? கனடாவில் தங்கியிருப்பதற்கான அனுமதி ஆவணங்கள் இல்லாத நிலைமையா? வேலை செய்வதற்கான பத்திரம் இல்லையா?

செல்லுபடியான சமூகக்காப்புறுதி எண் (SIN) அல்லது வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் அல்லது எந்தவொரு குடியுரிமை அந்தஸ்தும் இன்றி வேலை செய்கின்றீர்களா, அடிப்படைத் தொழிற்சட்டத்தின்கீழ் உங்களுக்கு இன்னும் உரிமைகள் இருக்கின்றன. வேலை நியமங்கள், சுகாதாரமும் பாதுகாப்பும், மனித உரிமைகள் மற்றும் வேலை செய்யும் போது தொழிலாளர்களுக்கு காயம் பட்டால் நட்ட ஈடு வழங்கும் தொழிலகப் பாதுகாப்பும் காப்புறுதிக்குமான சபை (WSIB) என்பவைகளையும் இது உள்ளடக்கும். உங்களது உரிமைகள் மீறப்படுமாயின் தொழில் அமைச்சில் அதற்கான பத்திரங்களை தாக்கல் செய்யலாம். தொழிலகப் பாதுகாப்பும் காப்புறுதிக்குமான சபை மற்றும் தொழில் அமைச்சு என்பன உங்களது குடிவரவு தொடர்பான தகவல்களை மத்திய அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது. நீங்கள் நாட்டை விட்டு வெளியேறி சென்றிருந்தால் கூட உங்களுக்கு சேரவேண்டிய ஊதியத்தொகையினை தொழில் அமைச்சு பெறக்கூடியதாக இருக்கும்.

நாம் வேலை செய்யுமிடங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் கதைத்தால் வேலையில் இருந்து நீக்கப்பட்டு விடுவோம் அல்லது நாடு கடத்தப்படுவோம் என்ற பயம் குடியுரமை ஆவணங்கள் இல்லாத நிலையில் இருக்கும் எம்மில் பலருக்கு உண்டு. எங்களுக்கு செலுத்தப்படாத சம்பளத்தொகையினை பெற அல்லது வேலைத்தள உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள பல வழிமுறைகள் உண்டு. உதவிக்கு எம்மை அழையுங்கள். அனைத்து அழைப்புகளும் இரகசியமாக வைத்துக் கொள்ளப்படும்.

## உதவியினை எங்கே பெற்றுக் கொள்ளலாம்

தொழிலாளர்கள் நடவடிக்கை நிலையம்

416-531-0778
கட்டண இலவச தொலைபேசி: 1-866-531-0778
www.workersactioncentre.org

மாற்றத்திற்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் கூட்டணி :

1-855-567-4722
www.migrantworkersalliance.org



Workers' Action Centre
416-531-0778
இலவச கட்டண தொலைபேசி: 1-855-531-0778
www.workersactioncentre.org